குயில்

பதிவெண் : எம். 7030.

கிழமை இதழ்

ஆசிரியர் :

பாரதிதாசன்

விலை 13 காசுகள்

குரல்: 1 | புதுச்சேரி, 23-9-58 செவ்வாய் | இசை: 17

காப்பியம்

சாதி புதைந்த மேட்டில் மாது புதைந்தாள் அழகன் மார்பில்!

க

அன்புடை அழகர்க்கு வரையும் அஞ்சல்:
நீர்ஒரு சாதி! நான்ஒரு சாதி!
ஆயினும் அன்பால் இருவரும் ஒருவர்.

நம்மைப் பெற்றவர் நச்சுச் சாதியாம்
பாழுங் கிணற்றில் வீழ்ந்தி ருப்பவர்,
அம்மணல், தவளைகள் நம்மணம் ஒப்பார்!

எனைப்பிரிந் திருப்ப துமக்கெப் படியோ,
உமைப்பிரிந் திருப்பதென் உயிர்பிரிந் திருப்பதே.

இன்றே இருவரும் எங்கேனும் ஓடலாம்
ஒன்றாய் — உயிரும் உடம்புமாய் வாழலாம்.

எழுதுக உடன்பதில்! இங்ஙனம் "அன்றில்"

உ

இனிய காதல் அஞ்சலை எழுதினாள்.
எழுதிய அதனை எவர்கொண்டு போவார்?
என்று நன்று கருதி யிருந்தாள்.

ந

அழகன் அழகுடல் அங்குவைத் தழகனின்
அன்பு நெஞ்சை அன்றில்பால் வைத்தான்.

அவளுடல் தழுவி இவண்வரும் தென்றலைத்
தழுவலால் சாகா திருந்தேன் ஆயினும்
நாணிக் குனிந்தொரு நாள்அவள் சிரித்த
மாணிக்கச் சிரிப்புத் தென்றலில் வருமா?

ஐயோ என்றே அலறினான் அழகன்!
சாதி முடிச்சு மாறித் தனத்தை
நம்புவார் பிடிக்குத் தப்பிநான் அவளோடு
கம்பி நீட்டினுல் கனிகசந் திடுமோ!

என்றே அழகன் எதிர்நோக் குகையில்
இந்தா அஞ்சல் என்றொரு கிழவர்
தந்தார்! அழகன் சடுதியிற் படித்தான்.

அவன் எழுதியபதில்:

அன்புடை அன்றிலே!
இன்றே இரவே இரண்டு மணிக்கே
இரண்டு பேரும் பரங்கிப் பேட்டைக்
கோடி விடலாம்! உறங்கி விடாதே!
மெதுக்காய் எழுந்து வளையலைக் குலுக்காது
நடந்துதாழ் திறந்து குறட்டை நண்ணுக.
வாழைக் குலையை வேழம் தூக்கல்போல்
எடுத்துச் செல்வேன். இங்ஙனம் "அழகன்"

வேழம் – யானை.

ச

எழுதி முடித்த இந்த அஞ்சலைக்
கிழவ ரிடத்தில் அழகன் கொடுக்க
அஞ்சினான்! அவன்பா டையப்பா டானதே!
தவறு தவளிடம் தருதல் வேண்டுமே
என்றான் அழகன். இணங்கினர் கிழவர்.
எவரும் அறியா திருக்க வேண்டுமே
என்றான் அழகன். எவரும் அறியார்
என்றார் கிழவர். என்னஇது என்று
பிடுங்கினுல் பெருங்கே டன்றோ என்றான்.
நெடுமூச் செறிந்து கிழவர் "நீர்இவ்வா
றையப் படுதல் அடுக்குமோ" என்றார்.

இவ்வா றிருவர் பேச்சும் நீண்டது.

ரு

அழகன் தந்தை அறையின் சன்னலின்
வழியாய் இந்த வழக்கறிந் தவனைக்
கொல்லையால் குடுகுடு வென்றே ஓடி
அன்றிலின் தந்தையை அழைத்து வந்தான்.
பதுங்கி இருந்து பார்த்திருந் தார்கள்.

சூ

கெட்டவர் அஞ்சலைக் கேட்கவும் கூடுமே
என்றான் அழகன். இரார்என் றார்அவர்.
உம்மை நம்ப ஒண்ணுமோ என்றான்
என்னை நம்புக என்றார் கிழவர்
இதற்குமுன் உம்மை யானறி யேனே
என்றான் அழகன் தொடர்ச்சி 4–ஆம் பக்கம்

புதுச்சேரி, தி. வ. ஆ௲ ககூஅகூ புரட்டாசி எ.

யானைமுகன்

செந்தமிழர் கான்றுமிழ்ந்த தீச்சரக்கு

வினாவிடை வெண்பா

ஆனபல் லாயிரம் ஆண்டறிந்த தென்னாட்டில்
யானை முகம்புகுந்த தெவ்வாறு? — மானே,
அடக்கமிலா ஆரியரால் ஆறும்நூற் றாண்டில்
வடக்கினின்று வந்த சரக்கு.

ஆறும் நூற்றாண்டு — கி. பி. ஆறும் நூற்றாண்டு.

திருவாத வூரார் திருவாச கத்தில்
ஒருயானை மூஞ்சிதான் உண்டா?-கருங்குயிலே
கூனும் கொடும்பல்லன் வந்திடுமுன் வந்ததே
தேனும் திருவா சகம்.

கூனும் கொடும்பல்லன் — யானை முகன்.

கலைகண்ட முன்னைக் கழகத்தார், "யானைத்
தலைகண்ட துண்டா தமிழில்?-கொலைவழியே
அன்னை குளித்தாள் அழுக்கெடுத்துப் பிள்ளை
இன்னவெலாம் அந்நாளில் ஏது? [செய்தாள்

கழகம் - தமிழ்ச்சங்கம். சங்க நூற்களில் பிள்ளையார் பேச்சே இல்லை என்றபடி.

பாலில்வரு நஞ்செனவே யானைமுகன் [பைந்தமிழ்
நூலில் நுழைந்தவகை எவ்வாறு?-வாலிழையே
பல்லவர் புத்தர் படைஎடுத்தார், செந்தமிழில்
வல்லவர் வாயடைத் தார்.

வால் இழை — தூய அணி அணிந்தவள்.

அடுத்துக் கெடுத்தார்கள் அந்தமிழை என்றால்
எடுத்துக்காட் டேதேனும் உண்டோ? - [வடுக்கண்ணாய்
மூவாயிரம் சொன்னான் மூலன்என்றார்
பாஎது மேல்நாற்பா னேழ்? [சேக்கிழார்

திருமூலர், 3000 பாடல்களே சொன்னதாகச் சேக்கிழார் சொல்ல அதற்குமேல் 47 செய்யுட்கள் எங்கிருந்து வந்தன என்றபடி

நாற்பத்தேழ் செய்யுளையும் நல்லதிரு மந்திரத்தில்
"ஏற்பத் திணித்தார் எதை எண்ணி? —
[வேற்கண்ணாய்,
ஐந்து கரத்தனை" ஆனதொரு செய்யுள்செய்து
முந்தவைத்தார் மூலன்நூ லில்.

திருமூலர் திருமந்திரத்தில் ஐந்து கரத்தனை என்ற யானைமுகன் பாட்டைச் செய்து முதலில் செருகினர் என்றபடி.

தூயதிரு மூலனார் சொன்னதொடக் கச்செய்யுள்
ஆய அதுதான் எதுபுகல்க?- நேயையே
"ஒன்றவன் தானே" எனல்என்று சேக்கிழார்
நன்று நவின்றாரன் றோ?

திருமந்திரத்தின் முதற் செயயுளாக "ஒன்றவன் தானே" என்று தொடங்கும் முழுமுதற்கடவுள் பற்றிய செய்யுளையே சொல்லி வைத்தார் என்க.

ஆத்திகர் என்ற அறிவிலிகள் இவ்வாறு
நாத்திகம் யாதுக்கு நாடினர்?- ஏத்தழகே
செல்லாத யானைமுகன் செல்லுபடி
[ஆக்க இந்தப்
பொல்லாங்கு சூழ்ந்தார் புகுந்து.

வந்த சிறுசரக்கு வாங்குநர்இ லாச்சரக்குச்
செந்தமிழர் கான்றுமிழ்ந்த தீச்சரக்கு-முந்தவிடும்
பானைவயிற் றுச்சரக்குப் பல்நீண்ட கைச்சரக்கு
யானைமுகன் என்னும் சரக்கு.

வந்தவர் மொழியா? செந்தமிழ்ச் செல்வமா?

ஓரை

இது தூய தமிழ்ச்சொல். இராசிகளின் பொதுப்பெயர். ஆனால், இது வடமொழி நூலுள்ளும், கிரேக்க மொழியுள்ளும் காணப்படுதலின், வடமொழியே என்று புகலுவார். அதற்குக் காரணம் இரண்டு. தமிழரை ஏமாற்றிவிடலாம் என்று அவர்கள் நினைப்ப தொன்று. ஆராய்ச்சியில்லாமை மற்றொன்று.

தொல்காப்பியத்துக் களவியல் ௪௪-ம் நூற்பாவாகிய,

"மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்"

என்பதன்கண் காணப்படும் ஓரை என்னும் சொல்லைக் கிரேக்க மொழி எனக்கொண்டு அவ்வாற்றால் தொல்காப்பியக் காலத்தையே கி. மு, மூன்றும் நூற்றாண்டென்று கூறி மகிழ்ந்து கொள்ளும் பகைவரும் உண்டு.

இதையே சிலர் வடசொல் என்றும் கூறிக் கொக்கரிப்பார்கள்.

ஓரை என்னும் இதுமட்டுமன்று. ஆயிரக் கணக்கான தமிழ்ச்சொற்களையும் வடசொல் என்றே ஏமாற்றித்திரிவார்கள். அவர்கள் யார்? தமிழ்மொழி கொண்டு தம்மொழி பெருக்கிய மொழிவெறியர்.

தொல்காப்பியத்துக்கு முற்பட்ட காலத்திலேயே ஓரை என்னும் சொல் வடமொழியிலேனும், கிரேக்க மொழியிலேனும் வழங்கப் பட்டிருக்குமாயின் அது அப்பிறமொழிச் சொல் எனலாம், காட்டட்டுமே!

மறைமலையடிகளார் கூறுகின்றார்: யாம் ஆராய்ந்த மட்டில் கி-மு மூன்றும் நூற்றாண்டிலாதல், அதற்கு முற்பட்ட காலத்திலாதல் இயற்றப்பட்ட கிரேக்க ஆரிய நூற்களில் ஓரை என்னும் சொல் வழங்குதலைக் காணேம்,

கி-பி ஆறும் நூற்றாண்டில் இருந்த வராக மிகிரரால், கிரேக்கரின் வான் நூல் ஆராய்ச்சியைத் தழுவி ஹோரா சாத்திரம் என்னும் ஒருநூல் வடமொழியில் எழுதப்பட்டிருக்கின்றது. அது கொண்டு ஹோரா என்னும் சொல் கி-பி ஆறும் நூற்றாண்டிற்குச் சிறிது முற்பட்ட காலத்தில் கிரேக்க மொழியில் வழங்கப்படாமை மட்டும் அறியப்படும்.

கி-மு இரண்டாம் நூற்றாண்டிலிருந்த கிரேக்க ஆசிரியரான "ஹிப்பார்க்கஸ்" காலத்திலே தான், கிரேக்கரின், வான் நூலாராய்ச்சி ஓர் ஒழுங்குபெறத் தொடங்கியது. அதன்பின் அது தாலமி என்பவரால் முற்றுப் பெறலாயிற்று.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி:

எதிரில் கிழவன்
அன்றிலாய் நின்றே "யான்தான் அத்தான்
அன்றில்" நாழிகை ஆயிற் றென்றாள்.
ஒருவெண் பொற்காசுக் கிரண்டுபடி அரிசி
கண்டநல் லாட்சி கண்டான் போல
மகிழ்ச்சி மனத்திற் றுண்டாவ மாடக்
கொடிய சாதிநாய் குலைக்கு முன்னே
நடந்துவா அன்னமே விரைந்துவா மானே
தொத்தடி கிளியே தோளில்! என்றான்

எ

அழகனும் அன்றிலும் வியக்கும் வண்ணம்
இருவரின் தந்தைமார் எதிரில் வந்தனர்.
இருவரும் திருமண மக்கள் என்றனர்
சாதி புதைந்த மேட்டில்
மாது புதைந்தாள் அழகன் மார்பிலே!

★ ▭ ★

பெரியார்க்கு வாழ்த்து!

எண்பதாம் ஆண்டடைந்தும் என்தமிழ்நா டெய்துவதே
பண்பதாம் என்றே, பகைவடக்கர் - மண்புதைய
வீழ்த்த எழும்பெரியார் வெல்கவே வெல்கஎன்று
வாழ்த்தி மகிழ்கின்ருேம் நாம்

''குயிலகம்'' புதுச்சேரி
17—9—58

பாரதிதாசன்

ஆகவே கி-மு இரண்டாம் நூற்ருண்டுக்கும் கி-பி இரண்டாம் நூற்ருண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தான் ஹோரா என்னும் சொல் கிரேக்க மொழியில் வழங்கப்பட்டதாகிறது. அவ்வாருகவே கி-மு இரண்டாம் நூற்ருண்டுக்குமுன் கிரேக்க மொழியில் வழங்காத ஓரை என்னும் சொல்லை அக்கிரேக்க மொழிக்கே உரியதென்பது பொருந்துமா? கி-மு இரண்டாம் நூற்ருண்டுக்கு முற்பட்டதாகிய தொல்காப்பியத்தை அந்நூற்ருண்டுக்குப் பிற்பட்டதாகிய அச்சொற்கொண்டு கி-மு மூன்ரும் நூற்ருண்டில் இயற்றப்பட்டதாகும் என்றல் பொருந்துமா?

மிகப் பழைய நூலாகிய தொல்காப்பியத்தில் ஓரை காணப்படுகின்றது. அக்காலத்தில் ஏற்பட்ட கிரேக்க, வடமொழி நூல்களில் ஓரை காணப்படவில்லை.

தொல்காப்பியத்திற்கு மூவாயிரத்து ஐந்நூருண்டுகட்குப் பிற்பட்ட—அதாவது கி-பி இரண்டாம் நூற்ருண்டிலிருந்துண்டான கிரேக்க—ஆரிய நூல்களில்மட்டும் ஓரை காணப்படுகின்றது.

இந்தக் காரணங்களால் ஓரை தூய பழைய தமிழ்ச் சொல்லே என உணர்ந்து கொள்க.

சரி

இது இன்றும் தமிழ் நாட்டிற் பல பாங்கிலும் செறி என்று பேசப்படுகின்றது. நினைவு கொள்க.

பெரியார் எண்பதாம் ஆண்டு வாழ்த்து!

த. பெரியார் அடியான்

ஆரியம் நீங்கியும் அருந்தமிழ் ஓங்கியும்
மடமை அருகியும் மதிமை பெருகியும்
தன்மா னத்தொடு தமிழர் வாழ
இரவும் பகலும் இளமை யுள்ளத்தோ(டு)
அல்லற் பட்டும் அவமதிப் புற்றும்
தனக்கென வாழாப் பிறர்க்கென முயலும்
எண்பான் அகவையின் அண்ணல் பெரியார்
இராம சாமியின் எல்லையில் ஆற்றல்
எண்ணிலா இளைஞர் எய்துக என்றே
வாழ்த்துதும் பெரியார் வாழ்க பல்லாண்டே

செறிவு என்பதன் முதனிலையே செறி, பொருத்தம் என்பதே இதன் பொருள். செறி என்பதுதான் சரி என மருவிற்று ஆதலின் சரி என்பது தூய தமிழ்ச்சொல் என்று கடைப்பிடிக்க.

*

அன்னை!

கண்காக்கும் இமைபோல என்னைக்
காத்தவள் அன்ருே எனைஈன்ற அன்னை!

எண்ணும் எண்ணங்கள் இழைக்கும் செயலெலாம்
எனக்கே ஆக்கி ஈஎறும் பணுகாமல்
(கண்காக்கும்)

பொன்னல்ல அவளாசை பூணல்ல அவளாசை
புத்துருக்கு நெய்ஒழுகும் உணவல்ல அவளாசை
என்நல்ல வாழ்வை அவள்காணும் இன்பம்
எப்போதெப்போ தென்ப தவள்ஒரே ஆசை
(கண்காக்கும்)

அன்பு மணுளன் காதலைத் தள்ளி
ஐந்தாண்டு வரைஎனை அழித்தாய் அள்ளிப்
பொன்முலை யூட்டிச் செந்தமிழ்ப் பள்ளி
புகுத்தும் வரைக்கும்என் மேல்ஒரே புள்ளி
(கண்காக்கும்)

வாழ்ந்தாள் என்ருல் தனக்கென்ரு வாழ்ந்தாள்?
வருந்திஞள் என்ருல் தனக்கென்ரு வருந்திஞள்?
தாழ்ந்தாள் மேனி! தனக்கென்ரு தாழ்ந்தாள்?
தன்னுடல் பொருள்ஆவி எனக்கன்ருே ஈந்தாள்?
(கண்காக்கும்)

உரையினை ஈன்றவள் செந்தமிழ் அன்னை
உறைவிடம் ஈன்றவள் தமிழக அன்னை
கருவிலே இவையெலாம் அடையவே முன்னைக்
கனிவயி றேந்திஞள் அவளேமுதல் அன்னை
(கண்காக்கும்)

பிராந்தையார்

தொடர் நாடகம்

க0

இடம் : *பச்சைக்கிளி வீடு.*

காலம் : *மாலை.*

கதையுறுப்பினர் : *பச்சைக் கிளியின் தந்தையாகிய பட்டுக்குடை, ஆட்கள், பச்சைக் கிளியின் தாய் முத்துநகை, மான் வளவன்.*

காட்சித்தலைப்பு ;

மிளகு வண்டிகள்

நிலைமை : *மிளகு ஏற்றிச் சென்ற வண்டிகள் வந்து வீட்டெதிர் நின்றன, பட்டுக் குடை வண்டியினின்று ஆட்களுடன் இறங்குகின்ருன் மனைவி எதிர்கொள்கிள்ருள்.*

பட்டுக்குடை : முத்துநகை நலமா? வாணிகம் நன்று. வருவாய் மிகநன்று. பச்சைக் கிளி எங்கே? மரப்பாவைகள் வாங்கி வந்தேன் அழகழகாய்!

முத்துநகை : பாவை கேட்கும் பருவம் போயிற்று. இப்போது பன்மணிக் கோவை கேட்கின்ருள். தோழிமார் வந்தார்கள். தோப்பு நோக்கிச் சென்ருர்கள். உடன் சென்ருள் பச்சைக்கிளி.

(உள்ளே போகின்ருன் பட்டுக்குடை)

தோப்பில்

ஒருத்தி– முன்னுளில் இதுதோப்பு! இந் நாளில் இது சோலை என்னும் இன்பத்தின் வாய்ப்பு! முன்னுளில் இது குரங்கு விளாம்பந் தடிக்கும் குறுங்காடு இந்நாளில் மணமலர்வீடு.

தடுத்து விழுந்தால் தலைதப்பாத கொலைக் களம் அப்போது! படித்துறை அமைந்த தாமரைக்குளம் இப்போது.

கரடி ஓடிவரும்! கடுங்குரங்கு தேடிவரும். கருஞ்சிறுத்தை கொல்லவரும் பெரும்புலிகள் தொல்லைதரும் அப்போது. நல்ல நல்ல முல்லை தரும் இப்போது. கொன்றை ஒருவரிசை கோங்கு மறுவரிசை கொட்டுப்பூ, கொடிப்பூ நீர்ப்பூ, நிலப்பூ வரிசை வரிசை!

தாமே வந்தன அல்ல தாமரை அழைக்க வந்த அன்னங்கள்!

ஒளித்து ஒளித்து ஓடவில்லை ஏன்? அவை வளர்த்துவிட்ட மயில்கள்.

அந்த ஈக்கள் கற்ற பாக்கள் எழுப்பும் பூக்கள்! – மணம் அவற்றின் இயற்கைக் குணம்! தங்கச் சரக்கொன்றைத் தள்ளும் அங்குச் சரக்கொன்றை சிந்தாம்; அரை பாடிய வண்டுபின் ஓடிச் செந்தாமரை பாடும். போதாக் குறைக்கு வெண்டாமரை பாடும்.

சில்லிவண்டு அல்லி பாடிப்பின் மல்லிகை பாடும். எங்கப்படி போயிற்றென்று பார்த்தால் தும்பி தங்கப்பொடி அள்ளித்தாவி அன்னத்தின் கண்கெடுக்கும் அப்பாவி! தூவித் தூவி!

முளரி: ஒன்றல்ல- ஆயிர மலர்களின் மணத்தை அள்ளி, இன்றல்ல– எந்நாளும் இன்பம் தருமிந்தத் தென்றல்.

பொன்னை நடுவிற் சுமந்த புன்னை
அண்டையில் அலரி மாணிக்கத் தென்னை

தங்கம்: ஒளிந்தாடுவோமா பச்சைக்கிளி?

கொன்றை; ஆடுவோம் ஆனல் ஒன்று வெய்யில் மேற்கில் விழுந்தவுடன் ஒருத்தி மற்றவர்க்காகக் காத்திருக்காமல் ஓடிவிட வேண்டும் வீட்டுக்கு!

பச்சைக்கிளி: நினைப்பு வருகிறது. நான் சின்னவளாயிருந்தபோது. கரடி வந்ததென்று என்னைவிட்டு ஓடிவிட்டார்கள் கூடவந்த

குட்டிகள். நடுக்குளத்தில் தத்தளித்தேன் நான். அருள் ஒழுகும் கண்ணன் ஒருவன் என்உடன் பிறந்த அண்ணன்போல் வந்து காத்தான் என்னை. அவன் என்னோடு வீட்டுக்கு வந்தான் அடுத்தடுத்து வருவான். போவான். இப்போது நாம் பிரிவது கூடாது!

தங்கம்: ஒன்று செய்யலாம் அதோ அந்தப் புன்னையடியில் ஒருவரை ஒருவர் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கவேண்டும், சேர்ந்தே போகவேண்டும் வீட்டுக்கு.

முளரி: அப்படியானால் துவக்குங்கள் ஆட்டத்தை!

(முளரியின் கண்கள் கட்டப்படுகின்றன, மற்றவர் பல புறங்களிலும் ஓடி மறைகிறார்கள். முளரி கட்டவிழ்த்துப் பார்க்கின்றாள் பல புறங்களிலும்)

ஒருபுறம்:

மான் ஒன்று ஆடுகின்றது. அதன் எடுத்தடி ஊன்றல் தாளத்திற்கு ஒத்ததாக இருக்கின்றது.

அப்பக்கம் ஓடிவந்த பச்சைக்கிளி பார்த்து வியந்து நிற்கின்றாள்.

மானிடம்காணப்படும் செயற்கைமுறையை அவள் மறக்கின்றாள். அவள் உள்ளம் கலைத்திறத்தில் கவிழ்கின்றது, இருகைகளையும் கூப்பியபடி தாளம் போடுகின்றாள். அவள் கால்கள் நிலைக்கவில்லை. நிலைபெயர்கின்றன. ஆடத் தொடங்கிவிடுகின்றாள். அதே தாள முடைய பாட்டொன்றை அவள் வாய்விட்டுப் பாடத் தொடங்கிவிடுகின்றாள் தன்னை மறந்தவளாய்.

பாட்டு

முத்தமிழ் மணப்ப தென்ன இந்நாட்டிலே-முத்து
முல்லை மணப்ப தென்ன தென்னாட்டிலே
ஒத்தவர் மணப்ப தென்ன இந்நாட்டிலே-நல்ல
உண்மைகள் மணப்ப தென்ன தென்னாட்டிலே
வித்தகம் பிறந்த தென்ன இந்நாட்டிலே-நல்ல
வீரர் பிறந்த தென்ன தென்னாட்டிலே
தத்துவம் பிறந்த தென்ன இந்நாட்டிலே-நல்ல
தருமம் பிறந்த தென்ன தென்னாட்டிலே
முறைகள் விளைந்த தென்ன இந்நாட்டிலே
முத்து விளைந்த தென்ன தென்னாட்டிலே
மறைகள் விளைந்த தென்ன இந்நாட்டிலே
வாய்மை விளைந்த தென்ன தென்னாட்டிலே
இறைமை சிறந்த தென்ன இந்நாட்டிலே
ஈதல் சிறந்த தென்ன தென்னாட்டிலே
திறமை சிறந்த தென்ன இந்நாட்டிலே
திருவும் சிறந்த தென்ன தென்னாட்டிலே

ஒருகுரல்: மாலையும் போனது வாடி பச்சைக்கிளி!

(இந்த அழைப்பு அவர்கள் விரைந்தாடும் நிலையை ஊடுருவுகின்றது. மான் ஆடாது நிற்கின்றது. பச்சைக்கிளி ஆடாமல் பாடாமல் நிற்கிறாள். அதன் பிறகு சோர்வு அவர்களைக் கொள்கின்றது. மான் நிலை தளர்ந்து விழுகின்றது பச்சைக்கிளி விழுகின்றாள் சோர்ந்து)

பச்சைக்கிளி: கலையுலகைப் பிரிந்தோம்!

மான்வளவன்: கவலையுலகில் வீழ்ந்தோம்!

பச்சைக்கிளி: தோழிமார் காத்திருப்பர்கள். எழுந்திருக்கவும் வலியில்லை எனக்கு.

மான்வளவன்: மெல்ல எழுந்திரு!

(தூக்கிவிடுகிறான்)

பச்சைக்கிளி: நல்ல உதவிக்கு நன்றி!

மான்வளவன்: உன்பெயர்?

பச்சைக்கிளி: பச்சைக்கிளி

மான்வளவன்: மான் என்று ஆடுவேன். மான்வளவன் நான்: இந்நாடு.

பச்சைக்கிளி: என் நாணம் என்வாயை அடைக்க வேண்டாம். நான் உன்னைத்தான் மணப்பேன். நீயும் அப்படித்தானே?

மான்வளவன்: அப்படியானால் நம்பெற்றோருக்கு அறிவிப்போம் நம் கருத்தை!

பச்சைக்கிளி: அவர்கள் ஒப்பாவிட்டால்...

மான்வளவன்: அவர்கள் தங்களுக்குண்டாகும் மரியாதையை இழக்கவா எண்ணுவார்கள்.

அடுத்த குயிலில்...!

கவிஞருக்கு, அண்ணாத்துரை
பொற்கிழி – பொன்னாடை
கொடுத்த கதை
வெளிவரும்.

பச்சைக்கிளி: எப்போது திருமணம் நடக்கும்?

மான்வளவன்: இப்போது!

(அன்பு முத்தம்! தோழிமார் வந்து விடுகின்றார்கள். அவன் போகிறான், அவள் நாணி நிற்கின்றாள்.)

தோழி க. சந்தனச் சேற்றில் புதைந்தது அந்தத் தங்கத் திருமேனி. இதழமுதில் நனைந்தது இந்த இன்பத் தமிழ்! நல்ல வேடிக்கை!

தோழி உ. இளமையின் வாழ்க்கை!

பச்சைக்கிளி: வீட்டில் சொல்லிவிட வேண்டாம்.

தோழி ந. சொல்லச் சொன்னானே உன் அகமுடையான்!

பச்சைக்கிளி: ஐயோ எப்போது?

தோழி க. சொன்னால் தப்பேது? விரைவில் திருமணம் நடக்க வேண்டாமா? நீயும் இந்தத் துன்ப நிலையைக் கடக்க வேண்டாமா?

தோழி உ. பச்சைக்கிளி! எனக்குத்தெரியும் இனி என்ன செய்யவேண்டும் என்பது!

(போகின்றார்கள்)

சோழ நாட்டில் ஒருபுறம், ஒரு வீடு.

சோழநாட்டுத் தூயன்: *(தன் தாயை நோக்கி)* பாண்டிய நாட்டில், அந்தப் பச்சைக்கிளியைத் தான் நான் மணப்பேன். நீங்கள் சொல்லும் குரங்கை நான் மணக்கவே மாட்டேன்.

தாய்: அவளைத் தான் நீ மணந்து கொள்ள வேண்டும் என்று நானா சொன்னேன், நானா சொல்வேன்,! பண்பாடுள்ள தமிழ் மகள் அப்படிச் சொல்வாளா தம்பி?

பாண்டிய நாட்டுப் பச்சைக்கிளிக்கு நல்லுதவி செய்ய உனக்கு வாய்ப்பு கிடைத்தது. அவள் உன்மட்டில் நன்றியுடையவள்! அன்புடையவளா? இதை நீ நன்றாய் ஆராய்ந்தாயா? நீ காதல் செலுத்துகின்றாய், அவளும் அப்படித்தானா! உன்மேல் எனக்கு ஆசை என்றாள் அவள் இளையவளாயிருந்தபோது! அவள் சொன்ன ஆசை, காதல் இல்லை தம்பி.

தூயன்: எனக்கும் அந்த ஐயப்பாடு உண்டு. ஆயினும், அவள் பெற்றோர் என்மீதில் அன்புடையவர்கள் அம்மா, சென்றதிங்கள் கூடச் சென்று அவர்கள் வீட்டில் விருந்துண்டேனே!

தாய்: விருந்திட்டார்கள் வந்த விருந்தினரை வருக என அழைத்து உண்பித்தல் தமிழர் பண்பாடு, அதுகொண்டு, நீ பெண்கொடுக்க ஒப்பி விட்டதாக எண்ணி விடலாகாது.

தூயன்: அவர்கள் ஒப்பக்கூடுமே.

தாய்: தப்பவும் கூடுமே! ஆய்ந்து முடிவு செய்.

தூயன்: பச்சைக்கிளிக்கும் எனக்கும் திருமணம் என்று செய்தி அனுப்புகிறேன் மகிழ்ச்சியோடு வந்து சேருங்கள் அப்பாவும் நீங்களும், என்ன!

தாய்: நன்றாய்.

தூயன்: அப்பா ஊரில் இல்லை. வந்தால் அவரிடம் சொல்லுங்கள் அம்மா! பாண்டிய நாட்டுக்கு நான் போயிருப்பதாக.

தாய்: நன்று, சென்று வா தம்பி!

(போகிறான்)

(தொடரும்)

பிழை திருத்தம்

6 – ஆம் பக்கத்திலுள்ள "அன்னை" என்ற பாடலின் 10–ஆம் வரியில், "அழித்தாய் அள்ளிப்" என்பதை "அமிழ்தாய் அள்ளிப்" என்று திருத்திக்கொள்க.

நச்சினார்க்கு நஞ்சா? அமிழ்தா?

"கயல்விழி"

கடல்கோளிலும், வெந்தழலிலும், சிற்றமுற்றுப் பொங்கிப் பெருகிவரும் ஆற்றுவெள்ளத்திலும், அழிந்தனபோக எஞ்சிய சங்கநூல்கள் பல.

வடபுலத்திலிருந்து இங்குப்போந்த ஆரியர்கள் வளம்பல நல்கிய தமிழ்நூல்களைக் கற்று நச்சுவிதைகளை வித்திட்டுச் சென்றனர். ஒருவன் அறிஞனாக இருந்தால் அவன் மறையவர் குலத்தவனாக இருத்தல் கூடுமென்பதும், தமிழில் நூல்செய்தால் அது வடமொழியிலிருந்து மொழிபெயர்த்ததாகக் கூற வேண்டுமென்பதும் அவர்கள் முடிவு.

இவ் விருவாற்றானும் கூறமுடியாதவற்றிற்குத் தாங்கள் உரை காண்கின்றோம் என்றுகூறி பொட்டைத்தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சிட்டது போன்று வேள்வியிலும் வேதத்திலும் ஆரியப் பண்பிலும் அவ்வுரையை வலிந்து முடிப்பது.

இப்படிப்பட்ட செயல்களையெல்லாம் அஞ்சாது செய்யும் பார்ப்பன உரையாளர்களில் நச்சினார்க்கினியரை உச்சிமேற்கொள்ளலாம்.

இன்று உலகிடை ஓரளவு நெஞ்சு தூக்கி நிமிர்ந்துநின்று இறுமாப்புடன் பேசுதற்கு ஒருதுணிவு உண்டெனில், அது தொல்காப்பியம் நம்மிடையே இருப்பது என்பதால்தான். தமிழரது அறிவும் பண்பாடும், செம்மையும் சீர்மையும், தொன்மையும் திறனும், இன்ன பிறவும் இனிது நல்கி, எழுந்து நின்று, வளனும் நலனும் சுரந்து இனிதுறைவது அத் தொல்காப்பியமேயாம்.

இத்தன்மையான தொல்காப்பியத்திற்கு உரைசெய்யப் புகுந்த நசசினார்க்கினியார் தமது ஆரியப்பண்பை நூலின் முதலில் இருக்கும் பாயிர உரையிலேயேகாட்டி ஆரியவெறியைப் புலப்படுத்தியுள்ளார்.

இந்நூலை யாத்த தொல்காப்பியர். நிலம் தரு திருவில் பாண்டியன் அவைக் களத்து அதங்கோட்டாசிரியர் உள்ளிட்ட அறிவாளர் பலர் முன்பு அரங்கேற்றி இருக்கிறார். அரங்கேற்றும் பொழுது கேளாதும் வேட்பமொழியும் சொல்லில் குற்றமின்றி உரை கூறி அரங்கேற்றினார் என்பது பாயிரத்திலிருந்து பெறப்படும் உண்மையாம்.

குற்றமின்றி என்பதற்கு அரில்தபத் தெரிந்து என்ற சொல்லைப் பெய்து பாயிரத்தை இயற்றி இருக்கிறார் இந்த 'அரில்தப' என்ற சொல்லுக்கு நச்சினார்க்கினியர் கூறும் உரையையும் வரலாற்றையும் உன்னும்பொழுது உள்ளம் வேகின்றது நெட்டுயிர்ப்பு நெடிது பெருகி நீண்டு வளர்கிறது விரிவை ஆண்டுக் கண்டு கொள்க.

தொல்காப்பியர் காலத்திலிருந்த அகத்தியனார் அதங்கோட்டாசிரியரிடம் "நீதொல்காப்பியர்நூலைக் கேளாதே" என்று கூறியதாகவும் தொலகாப்பியர் அடிக்கடி அதங்கோட்டாசிரியரிடம் சென்று நான் செய்திருக்கும் நூலை நீங்கள் கேட்டல் வேண்டும் என்று கூறியதாகவும் கூறுகிறார், நச்சினார்க்கினியர்.

அதங்கோட்டாசிரியர் ஒரு மறையவர் அவரிடம் தமிழ்த்தோன்றல் காப்பியனாரை அனுப்பி ஏக்கற்றுக் கிடக்கும்படித் தம் உரையில்எழுதி அதில் அமைதியும் இன்பமும் கண்ட நச்சினார்க்கினியர் நம் தமிழர்கட்கு நஞ்சா? அமிழ்தா?

தேவரனைவரும் ஒருங்கு கூடி மேருமலையில் இருக்க மேருதாழ்ந்து தென் திசை உயர்ந்ததாம் அங்கிருந்தோர், அகத்தியர் தென்புலம் நோக்கிச் சென்றால்தான் சம நிலையுறும் என அவரும் இணங்கித் தெற்கு நோக்கி வருகிறார். வந்தவர் வறிதே வர வில்லையாம் கங்கையிடம் சென்று காவிரி ஆற்றை வாங்கினாராம்.

வான் பொய்ப்பினும் தான் பொய்யாத ஒரு தமிழ் நாட்டு ஆறுகூட வடபுலத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதாம். தானாக வளஞ்சுரந்து பெருகி வரும் ஆற்றைக் கூடத் தமிழ்நாட்டு ஆறு என்று கூறக்கூடாத அளவுக்குப் பண்பற்ற உள்ளம் கொண்ட அவர் நமக்கு நஞ்சா? அமிழ்தா?

கங்கையிடமிருந்து காவிரி பெற்ற அகத்தியர் அதோடும் அமையாது யமதக்கினியாரிடம் சென்று திரணதூமாக்கினியாராகிய தொல்காப்பியரையும் வாங்கி வந்தாராம்.

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து வாளோடு முன்தோன்றி மூத்த குடிவழிப் போந்த மூதறிஞர் தொல்காப்பியரை ஆரியராக்கும் நச்சினார்கினியர் தமிழர்கட்கு நஞ்சா? அமிழ்தா?

இதுபற்றிக்கீழ்வரும் பேராசிரியர், கணக்காயர், சோமசுந்தரபாரதியார் அவர்களின் உரையை உன்னுக.

"பொய்மலிந்த புராண காலத்தில் மற்ற தமிழ்ப் பெரியாரோடு இவரையும் (தொல்காப்பியரையும்) பார்ப்பனனுக்கும் நோக்குடைய பண்டிதர், (நச்சினார்க்கினியர்) இவனுக்குத் திரணதூமாக்கினி என்ற புதுப் பெயர் சூட்டி, இத்தமிழ்ப் பெருமகனை ஆரிய குலத்தானாக ஆக்கி ஒரு கதையையும் புனைந்து மறைக்குடியிற் புகுத்தி முடித்தார். தமிழை இழிவாக்கக் கூசாது எதையும் கூறத் துணிந்த இவர்கள் ஆரிய நூலில் இதற்கு ஆதாரமின்மையை ஒரு தடையாகக் கருதமாட்டார்;"

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுகம்" எனப்பாயிரம் ஆரம்பமாகிறது.

இதற்கு விரிவுரை கூறப்புகுந்த நச்சினார்க்கினியர், "இதில் ஏன் முதலில் வடதிசையைக் கூறினார்?" என்ற கேள்வியை எழுப்பினார்.

"மங்கல காரியம் செய்வார் வடக்கு நோக்கிச் சிந்தித்து நற்கருமங்கள் செய்வாராகலின் முதற் கண் வடதிசையைக் கூறினார்" என்று விடை கூறுகிறார். வடதிசையில் தலைகூட வைத்துப் படுக்கக் கூடாது என்பது நம் மூதாதையர் தந்துசென்ற பழமொழி. வடக்கிருந்துவரும் காற்றுகூட இன்னா செய்யும் தன்மைத் தாதலின் அதனை வாடைக் காற்று என்றனர்.

நற்கருமம் என்ற சொல்லை நோக்குக. நாம் கூறும் வார்த்தையா இது? வடதிசை என்ற ஒரு சொல்லை வைத்துக்கொண்டு கருமத்தைப் (ஆரியத்தை) புகுத்தும் நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா? நற்கருமத்தைப் புகுத்தியவர் அதோடும் அமையவில்லை. புராணத்தையும் புகுத்துகிறார் வேங்கட மலையிலிருந்து திருமாலை நோக்கி உலகம் தவம் செய்து வீடுபேறு பெற்றதாம். தமிழ் நாட்டு எல்லை கூற வந்த மலையுடன் புராணத்தைப் பிணித்த நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா?

புராணத்தைப் புகுத்திய அவர் அதனுடன் தொடர்பு பட்ட புண்ணியநீரை (தீர்த்தம்)-யும் தன் உரையில் வலிந்து புகுத்தாமல் இருக்க அவர்மனம் ஒப்பவில்லை. "குமரி தீர்த்தமாகலின் அதனை எல்லையாகக் கூறினார்" என்று உரை வகுக்கிறார்.

தமிழர்கட்குத் தீர்த்தம் உடன்பாடன்று என்பதைப் "பிலம்புக வேண்டும் பெற்றி ஈங்கில்லை" என்று கவுந்தியடிகள் வாயிலாக இளங்கோவடிகள் கூறியதை நோக்குக.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுகம்" என்ற ஐந்து வார்த்தைகளை வைத்துக்கொண்டு அதன்மூலம் பார்ப்பனீயச் சாரத்தைப் பிழிந்தெடுத்து வலிந்து உரையெழுதிய நச்சினார்க்கினியர் தமிழர்கட்கு நஞ்சா? அமிழ்தா? இதுவரைநாம் கண்டது இலக்கணத்தில் நச்சினார்க்கினியர் விதைத்த நச்சு விதை.

இனிப் பத்துப்பாட்டில் ஒன்றாகிய மதுரைக் காஞ்சிக்கு உரை வகுக்கும் பொழுது; நல்லாசிரியர் என்ற ஒரு சொல்லுக்குக் கீழ்க்கண்டவாறு உரை கூறுகிறார்.

"அந்தணர்க்குக் கூறிய முறையே முன்னுள்ள கருமங்களை முடித்துப் பின்னர்த் தத்துவங்களை ஆராய்ந்து மெய்ப்பொருள் உணர்ந்து வீட்டின்பம் எய்திய ஆசிரியர்" என்கிறார்.

அவ்வாறுயின் வேதத்தைக்கற்றவர்தான் நல்லாசிரியாரா? முட்டறுத்து முழுமெய்யறிவினைப் பெற்ற அறவோர் நல்லாசிரியர் ஆகாரா?

மதுரைக் காஞ்சிக்கு அண்மையில் உரை வகுத்திருக்கும் பொ. வே. சோமசுந்தரனார் அவர்கள் நல்லாசிரியர் என்பதற்கு "அகத்தியரை உள்ளிட்ட பழைய ஆணையை உடைய வினையின் நீங்கி விளங்கிய மெய்யறிவினையுடைய நல்லாசிரியர்" என்கிறார்.

நல்லாசிரியர் என்ற ஒரு சொல்லைக் கொண்டு அந்தணரை வரவழைத்து அவர்களது முறையான கருமங்களைக் கூறித் தத்துவங்களைக் காட்டிய நச்சினார்க்கினியர் நஞ்சா? அமிழ்தா? நச்சினார்க்கு (தன் உரைமூலம் தன்னை அடைந்தவர்களுக்கு) எவ்வாறு இவர் இனியவராக விளங்குதல் முடியும்?

கொடிய நஞ்சை உண்டுவிட்டால் நாம் அழியும் போது நாம் உண்ட நஞ்சும் உடன் அழிந்துவிடும் ஆனல் இவரோ தமிழ்வயலில் ஆங்காங்கே நஞ்சை விதைத்திருக்கிறார். அது முளைத்துக் கிளைத்து மறுபடியும் நச்சு விதையைக் கொடுத்துக் கூர்ந்து பெருகி நிற்கிறது. இந்த நச்சு விதையை முடுகி நின்று கடிது விலக்கித் தமிழ் நிலத்தைத் தூய்மையதாக ஆக்குவோம். தெளிவுரைகொண்டு தீந்தமிழ்க் காவியத்தில் படிவோம்; திளைப்போம்.

★ ★ ★

பெரியார் பிறந்தநாள் வாழ்த்து!

முதுகண்ணன்

அளவியற் கலையா லளப்பவ ரளப்ப
வளந்திடற் கரியதே யாகி
அளவிலா வாற்ற லியற்கையி னோர்நா
ளரும்பியே யிருண்டமா ஞாலம்
அளவிடற் கரிய வொளியினைப் படைத்தே
அறிவினிற் சிறந்திட வந்தாள்
அளவிடற் கரிய பெரும்பணி புரிந்தோர்
அளவினை அளவிடற் கெளிதோ!

அப்பெரு ஞாலத் தொளியினைக் கெடுத்தே
அடிமையும் மடமையும் வித்தி
தப்பியே மீளா வகைபுரிந் திட்ட
தன்னலப் பேயிரு ளதுதான்
இப்பெரு ஞாலத் துலவிடா தோட
வெழுங்கதி ரொளியினைப் பரப்பி
இப்பெரு ஞாலம் விளக்கிடு ஞாயிற்
றியல்பினை யிசைக்குமா றெவனோ!

உருக்கிய தங்கத் தொளிர்ந்திடு முடம்பும்
உடம்பெலா மொளிவிடு முணர்வும்
அருக்கனை மூடிப் படர்கரு முகிலி
னறுவையு மதன்கணே படர்ந்தாங்
கிருக்கும்வெண் முகிலின் தாடியும் வான
மிடித்துறு மழையெனப் பேச்சும்
தருக்கெலா முடைய பகைப்புலம் விரும்பத்
தவழ்ந்திடு மினியவெண் ணகையும்,

ஏறுபோ னடக்கும் பீடுறு நடையும்
இயற்கையோ டியைந்தநல் வாழ்வும்
வேறுபா டற்ற அருள்வழி விழியும்
வியன்துலாக் கோலென மெய்மை
ஊறுபா டின்றி யுணர்தலும் உணர்ந்த
ஊர்நடு நின்றெடுத் துரைக்கும்
வீறுசால் வலியும் புரட்சியு மொருங்கே
மேவிய தெனின்மிகை யன்றே!

"சிறந்தபல் வளங்கள் திகழ்வதான் மிக்க
திருவிடம் பிறப்பிட மாகப்
பிறந்தவர் தம்முள் சிறந்தனன் யானும்
பேசரும் புகழ்மிகு பெரியார்
பிறந்துவாழ் கின்ற நாளிலே வாழப்
பிறந்துளே னாதலி" னென்று
திறந்துள மகிழ்ந்து செப்பினார் புரட்சி
திருவிடக் கவிஞராம் செம்மல்,

எங்குள்ளாள் அறிந்து சொல்வாய்!

கடலூர், வீ. கு. ஜீவா.

பெண்ணிற் பெரியவள் பெற்றோர்க் கினியவள்
கண்ணில் கலந்தவள் கருத்தில் நிறைந்தவள்
எண்ணில் நிலைத்தவள் இதயத்தை ஆள்பவள்
மண்ணில் எனக்கவள் வாழ்வின்ப மானவள்
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய் – கிளியே
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய்!

எனக்கே பிறந்தவள் எழில்மிகப் பெற்றவள்
குணத்தில் குன்றவள் கொள்கைக்குச் சான்றவள்
தனத்தில் எனக்கவள் தங்கமலை யானவள்
மனத்தில் மலரவள் மதியின் நிதியவள்
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய் – கிளியே
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய்!

பொன்னால் செய்தசிலை புதுமை நிறைந்தநிலை
கண்ணில் இருக்கும்கலை கண்டாயோ நீஅவளை
சொன்னால்இனிப்பவளைத்தொட்டால்மணப்பவளைக்
கண்ணால் கண்டால்கவலை கருகிவிடும் இவ்வேளை
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய் – கிளியே
எங்குள்ளாள் அறிந்து சொல்வாய்! ★

"செயற்கருஞ் செயல்கள் செய்பவர் பெரியார்
செய்கலார் சிறியவர்" என்றே
மயல்கெட மொழிந்த வள்ளுவப் பெரியார்
வாய்மொழிக் கிலக்கிய மாக
அயற்படு நெறியிற் சென்றவர் தமையும்
அருந்தமிழ் நெறியினுக் காக்கும்
முயற்சியிற் சிறந்த வெற்றிகொள் பெரியார்
மெய்ப்புகழ் யாங்ஙனம் மொழிகோ!

ஏசுவே என்கோ? சாக்ரடீ சென்கோ?
இலிங்கனென் கோ?புத்த னென்கோ?
மாசெலாம் போக்கும் வள்ளுவ ரென்கோ?
மகமதுநபி யென்கோ வையம்
பேசிய காந்தியின் மேலவ ரென்கோ?
புகன்றவர் யாவரு மென்கோ?
ஆசில்சீர் பெரியார் விடுதலை வீரர்
அறிவிறை யென்னுமிவ் வுலகே! ★

குறிப்பு:

செய்யுள் ந. அறுவை – ஆடை
செய்யுள் ச. துலாக்கோல் – தராசு

ஆராவமுதம்

"சித்தன்"

" ஆரமுதை அருந்தியவர் அமரர் ஆவார்;
அழிவார்கள் அஃதுண்ணுர் ஆயுள் குன்றி! "
நாரதற்கு யாரோமுன் நவின்ருரிந்த
நற்கருத்தை! இன்றும்நாம் நலத்தை வேண்டின்
சீரமுதம் உணல்வேண்டும்; செம்பொன் ஞகச்
செய்திடலாம் நல்லுடலை; வாழ்வோ நீளும்!
" ஒரமுதம் நாமெய்த லுண்டோ " வென்பீர்!
உயரமுதம் உண்டிங்கே அதுபால் கண்டீர்!

பாலுண்டே என்போர்கள், தம்மைக் காக்கும்
படையுண்டே என்போர்கள்; பகைநோய் கொல்லும்
வேலுண்டே என்பாரேல்; வியப்பும் உண்டோ?
விண்ணேர்கள் அவரல்லால் வேறெங் குள்ளார்?
மாலுண்டே பயனில்லாப் பொருள்பெற் றுண்ணும்
மானிடரே! பாலொன்றே வாழ்வைக் காக்கும்!
பாலுண்டே! அதைவிட்டுப் பணத்தைக் கொட்டிப்
பாழ்ங்கிணற்று நீர்பெற்றே பருகல் நன்ருே?

பசும்பாலில் உயிர்ச்சத்(து)ஏ உண்டென் பார்கள்!
பலசத்தும் நிறையுணவோ இதுவொன் றேயாம்!
பசும்பாலில் கொழுப்பு,சர்க் கரை,உப் போடு
பல், எலும்பு வளர்க்குஞ்சுண் ணம்புச் சத்து,
தசைவளர்க்கும் புரதச்சத் தனைத்தும் உண்டு!
தாய்ப்பாலைப் போல்மூன்று தரம்மே லீதாம்!
பசும்பாலில் உலோகச்சத் துண்டே; யாரும்
பால்பருக இறைச்சிச்சத் தடைவர் நன்றே!

(உயிர்ச்சத்தே = உயிர்ச்சத்து–ஏ: Vitamin A)

ஒரு " லீத்தர் " பாலினிலே உள்ள சத்தை
உரைத்திடுவேன்: முட்டைக்கோஸ் 'பவுண்டு' நான்கு
இருபவுண்டு நல்லுருளைக் கிழங்கு; மற்றும்
இறைச்சியொரு பவுண்டுடனே பத்து முட்டை;
ஒருபவுண்டு கோழிக்குஞ் சதுபோல் பங்கைங்
துயர்முள்ளங் கிக்கிழங்கு; "காட்"மீன் சத்தோ
ஒருமூன்று பவுண்டென்பர்; ஆய்ந்தோர் சொல்லும்
உண்மையிதாம்! அமுதிதெனில் உயர்வஃ தாமோ?

(லீத்தர் = கால் காலன்; ஏறக்குறைய 2 சேர்)
(பவுண்டு = 16 அவுன்ஸ். 'காட்' = மீன்எண்ணெ தரும் மீன்)

****

வருகிறது !

வருகிறது !!

சென்னை - ஆந்திர எல்லைத் தகராறு பற்றிய படாஸ்கர் தீர்ப்பு அடுத்த ஆண்டு சட்டமாகி அமுலுக்கு வருமாம்.

டெல்லிசட்டசபையின் அடுத்த கூட்டத்தில் டி தீர்ப்பை நிறை வேற்றுவதற்கான சட்டம் செய்யப் படவிருக்கிறதாம்.

இச்சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய விதிகள்பற்றிச்சென்னை ஆந்திர அரசினர் அளித்த கருத் துக்கள் பரிசிலனை செய்யப்படு கின்றனவாம்.

சட்டம் தயாரான பிறகு இரு அரசாங்க சட்டசபைகளுக்கும் அனுப்பப்படுமாம்.

— இத்தகவலை டெல்லிமேல் சபையில் மந்திரி பந்த் வெளியிட் டிருக்கிருர்.

★ ★

****

இளமையிற்கல்

புதுவை வித்துவான்-தே. செயராமன்

நேராகப் பள்ளிக்கு நீபோ - கல்வி
நிலையான பொருளதை நீதேடு தம்பி!
வாராது போகுமே இளமை - கற்க
வந்துள்ள நாளிது மயங்காதே போ! போ!
தாய்தந்தை சொல்லைநீ நம்பு — ஊக்கம்
தளர்ந்துள்ள வேளையில் அதுதரும் தெம்பு
தீயினர் நட்பினால் வம்பு — அதைத்
தகர்த்திட நல்லவர் சொல்லேஓர் அம்பு,
உள்ளதை உள்ளபடி சொல்லு — ஊரில்
நல்லவன் என்றபெயர் நீதேடிக் கொள்ளு!
செல்லாத காசா யிராதே - நாட்டில்
சிறப்பான பண்புடன் புகழ்ஓங்கி நில்லு:
வஞ்சனை, பொய்,சூது கொள்வார் - கொண்டு
வாழ்விலே தொல்லையில் தாமே தவிப்பார்
கஞ்சிக்கு வழியின்றி நிற்பார் - கல்வி
நஞ்சென்று கருதிடும் அவர்போ விராதே!

இந்திக்கு நல்லுரை

ஏகிரிமங்கலம், ம. வீரப்பிள்ளை

சொல்லக் கேள்நீ! சொல்லக் கேள்நீ!
நல்லுரை உனக்குச் சொல்வதைக் கேள்நீ!
வடக்கில் இருந்து வந்திவண் சூழ்ந்து
இடமது பெற்றிட எண்ணம் கொண்ட
இந்தி மொழியே! இதனைக் கேளாய்!
சிந்தித் திடுநீ வந்தாய் ஒருகால்
தடுத்தோம் ஓடினை திரும்பவும் இங்கே
எடுத்தடி வைத்திட எண்ணமேன் கொண்டனை?
முன்னாள் சிற்சில வடசொல் செந்தமிழ்
மொழிதனில் சேர்ந்ததை முறியடிக் கின்றோம்!
இந்தி எதிர்ப்பிங் கியங்கிய போழ்து
எத்துணை மக்கள் எய்தினர் சிறைதனில்
என்பதை நீயும் எண்ணிட விலையோ?
உன்னை யொழிக்க உறுதி பூண்டுள
தந்தை பெரியார் தாமுளர் "குயிலால்"
சிந்தையில் கருத்தைச் செலுத்தப் புரட்சிக்
கவிஞரும் உள்ளார் அவர்மொழி ஏற்க
குவிந்திடு வார்கள் கணக்கிலாத் தொண்டர்
உனக்கிடம் தந்திடோம் ஓடிடு
உனக்கிது நல்லுரை ஓடிடு வாயே!

★

கைவிடு வாயோ நெஞ்சே!

— குமணன் —

பகையுறும் இனத்தா ருன்மேல்
பழியுற மொழிந்திட் டாலும்
தொகைதொகை யாகத் துன்பம்
தொடர்ந்துனை அழித்திட் டாலும்
வகைவகை யாக மாற்றார்
வந்துனை எதிர்த்திட் டாலும்
நகைத்துநீ மேலே செல்ல
நன்னெஞ்சே தயங்கு வாயோ?

திருநிறை மனையாள் தன்னின்
சேல்விழி கலங்கும் போதும்
மருவிடும் அருமை மைந்தர்
வறுமையிற் சோரும் போதும்
வருபகை யுடனே கூடி
வன்னெஞ்சர் சாடும் போதும்
கருதிய கொள்கை தன்னைக்
கைவிடு வாயோ நெஞ்சே?

வஞ்சகர் எனவே மாற்றார்
வாழ்த்திடும் போதும், உண்ணக்
கஞ்சியும் இன்றி வாழ்வில்
கலங்கிடும் போதும் கொல்லும்
நஞ்சினைக் கொணர்ந்தே யுண்ண
நயமிலார் நீட்டும் போதும்
கொஞ்சமும் கொள்கை தன்னில்
குன்றிடு வாயோ நெஞ்சே!

அரும்பிடும் உறவின் காதல்
அழித்துனை வதைக்கும் போதும்
தருதுயர்ச் சிறையில் தள்ளி
தளைத்துனைப் புடைக்கும் போதும்
திருவுறை உடலம் சாய்த்துத்
தீயுணப் போடும் போதும்
கருதிய கொள்கை தன்னைக்
கைவிடு வாயோ நெஞ்சே!

★

பெரியார் வழியில்

நல்லியக்கோடன்

உரிமைசொல் பெரியார் உணர்த்திடும் நெறியில்
உழைத்து வருபவர்நாம்;—முறையாய்த்
தழைத்து வருபவர்நாம்—வீணும்
பெருமைகொள் மற்றைய தன்னலக் கட்சியில்
பிழைப்பதவரேதாம்;—இன்னல்
இழைப்பதவரேதாம்!

கொள்கைப் பெரியார் கட்டளைக் கிணங்கக்
கொதித்தே எழுபவர்நாம்;—மக்களை
மதித்தே வாழ்பவர்நாம்—கீழாம்
உள்ளத் துணர்வால் உண்மையை மறைத்தே
உளறுவதவரேதாம்; —வெறியைக்
கிளறுவதவரேதாம்!

சிறையினில் பெரியார் சீடராய்ச் சென்று
சீர்மை படைத்தவர்நாம்;—நட்புச்
செல்வம் படைத்தவர்நாம்—திரையின்
மறைவினில் விலங்காய் மங்கையு மதுவுமாய்
மகிழ்வதவரேதாம்;—கொள்கை
நெகிழ்வதவரேதாம்

அறிவிற் பெரியாரை அல்லும் பகலும்
அறிந்து சிறந்திட்டோம்;—தன்னலம்
தெரிந்து துறந்திட்டோம்;—பின்னதாம்
பிறபல வளர்ப்போர் பொய்யைக் காக்கும்
பொல்லாரானாரே—தெளிவே
இல்லாரானாரே!

ஆராய்ந்து பார்!

புதுவை, வ. பொன்னம்பலம்.

தரணியிலே தலைநிமிர்ந்து தமிழனே நீ நடந்திடு
சரிநிகர் சமானமாக யாவரையும் மதித்திடு
மலைதலைமேல் விழநேரினும் மனதில்அச்சம் நீக்கிடு
மறவர் இனத்தின் வீரம்தன்னை உலகம்போற்ற
[நாட்டிடு (தரணியிலே)

சாதிசமயம் ஆக்கியவன் வேதியோன்நீ உணர்ந்திடு
தமிழர்நம்மைப் பிரித்துவைக்கச் செய்தசூழ்ச்சி
யறிந்திடு
பேதமின்றித் தமிழர்சேர்ந்து வாழவேவழி வகுத்திடு
புல்லர்நமக்குச் செய்ததீங்கை உலகமறியவுரைத்திடு
(தரணியிலே)

வடவர்ஆட்சிப் பிடியிலிருந்து நாட்டைமீட்க
[முனைந்திடு
மானமுள்ள தமிழனே உளங்கொதித் தெழுந்திடு
அடிமைவாழ்வுதீரகடமை யாற்று;செயலில்குதித்திடு
அழகுமிளிரும் நந்தமிழ்த்தாய் விலங்கையுடைத்தே
[எறிந்திடு (தரணியிலே)

காந்திகாங்கிரஸ் பேருரைத்துன் கவனத்தைத்
[திருப்புவார்
கட்சிப்பேரைக் கூறித்தங்கள் வலைதனிலே
[வீழ்த்துவார்
சாந்தம்,அகிம்சை கடைப்பிடிக்க வேண்டுமென்றே
[போதிப்பார்
தமிழனேயுன் நிலைமைஎன்ன? என்பதை
[ஆராய்ந்துபார்! (தரணியிலே)

பத்தவச்சலம் பாடும் பாட்டு.

நெல்லில்லை என்றுசொன்னால் உண்டென்பார்! நேரான
சொல்லில்லை என்றால் தொழில்என்பார்! – நல்லதமிழ்
வித்தவிச்சுத் தில்லிக்கு வேலைசெய்யும் நம்அமைச்சர்
பத்தவச்ச லம்பாடும் பாட்டு.

வித்து அவிச்சு – விதையை அவித்து.

குயில்

Regd. No. M. 7030.

திரும்பிப் பார்த்தால் என்ன?

திரும்பிப் பார்த்தால் என்ன?
விரும்பிப் பார்த்த என்னை அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பெரியவேலை உள்ளவன் போலே
பெண்ணை வெறுத்தவன் போலே
அரும்புஞ்சிரிப்பை அடக்கிச் சென்றான்
அசையும் தேரைப் போலே — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

குன்று சார்ந்த நாடும் வீடும்
கொடுவென்று கேட்டேனா—நான்
சென்று வழியை மறித்துச் சிரித்து
மடியிற் கைபோட் டேனா — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

மானென் றும்ஒரு மயிலென் றும்என்னை
அழைக்கச் சொன்ன துண்டா? என்னை
ஏன்என் றொருசொல் சொன்னால் உள்ளம்
ஒடிந்திடுமோ துண்டா? — அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

சதையில் மெருகும் முகத்தில் அழகும்
தாங்கிச் சென்றான் கொடியன் — நான்
அதிலே கொஞ்சம் இதிலே கொஞ்சம்
அள்ளிக் கொள்ளவா முடியும்?—அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

பாதி மறைத்துப் பாதி விலக்கும்
படத்து நடிகை யா நான்?
காதல் கொண்டஎன் முகத்தைப் பார்க்கக்
கண்ணும் கூசுவ தேனோ?—அவன்
திரும்பிப் பார்த்தால் என்ன?

ஆசிரியர், வெளியிடுவோர், பொறுப்பாளர்: **பாரதிதாசன் புதுச்சேரி.**

அச்சிடுவோர் : **மா. தண்டபாணி,** பழநியம்மா மின்விசை அச்சகம், புதுச்சேரி.